கூடுதல் மாவட்ட மற்றும் அமா்வு நீதிமன்றம்
தேனி (இருப்பு) பெரியகுளம்
முன்னிலை: திருமதி, வி. திலகம், பிஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமா்வு நீதிபதி
2020ம் ஆண்டு செப்டம்பா் மாதம் 15ம் நாள் செவ்வாய்க்கிழமை

<u>அ.வ.எண்.78/2019</u>

பி. செந்தில்குமாா் ... வாதி

... எதிா்...

கே. பாலாஜி ... பிரதிவாதி

இம்மனு 08.09.2020ம் தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞா், திரு.எம்.காமராஜ் அவா்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞா் திரு.ஜி.தியாகராஜன் அவா்கள் ஆஜராகியும், எதிா்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டும், பிரதிவாதி தரப்பில் ஆஜரில்லாமல், தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும் வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

## <u>தீா்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதி, பிராது தொகை <u>ரூ.12,23,600/-ம்</u>, அசல் தொகை <u>ரூ.</u> 8,00,000/-க்கு பிராது தேதி முதல் தொகை செலுத்தும் தேதி வரை 12 சதவீத பின்வட்டியும், இவ்வழக்கு செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும், வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

### <u>2. வாதி வழக்கின் சுருக்கம்.</u>

வாதியும், பிரதிவாதியும், குடும்ப பழக்கத்தின் அடிப்படையில் பழக்கமானவா்கள். பிரதிவாதி வாதியிடம் தனது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக்கடன்களை தீா்க்கவும், 24.02.2015 அன்று வாதியின் வீட்டில் வைத்து கடனாக ரொக்கம் <u>ரூ.8,00,000/-ம</u> பெற்றுக் கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு நுற்றுக்கு 18 வட்டி சோ்த்து வட்டியும், அசலும் வாதி வேண்டும்போது வாதிக்கோ, வாதி உத்தரவு பெற்றவா்களுக்கோ ரொக்கம் செலுத்தி வைப்பதாக கூறி வாதிக்கு அன்றைய தேதியில் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளாா். மேற்படி பிராமிசரி நோட்டு கடன் மேற்படி பிராமிசரி நோட்டுக்கான அசல் மற்றும் வட்டி தொகைகளை செலுத்தும்படி வாதி பிரதிவாதியிடம் நேரிலும், ஆட்கள் மூலமும்

துயர்ந்ததில் செலுத்தி விடுவதாகவே கூறி காலம்கடத்தி வந்துள்ளார். பின்னர் வாதி 12.12.2017ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை 27.12.2017ம் தேதி பிரதிவாதி பெற்றுக்கொண்டு 13.01.2018ம் தேதி பொய்யான சங்கதிகளை கூறி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார். பிரதிவாதி பிராமிசரி நோட்டின் பேரிலான கடன் தொகை மற்றும் வட்டி தொகைகளை செலுத்தி தீர்க்காமல் இருந்து வீண்காலம் கடத்தி வந்ததால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. பிரதிவாதி அழைப்பாணை பெற்று வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் ஆஜரில்லாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையிலும், ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்பட்டது.

4. <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை</u>

1. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

5. <u>பிரச்சினை</u>

வாதி தரப்பில் வாதி வாசா1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு வாசாஆ1 முதல் வாசாஆ4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. வாதி தரப்பில், பிரதிவாதி வாதியிடம் தனது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக்கடன்களை தீர்க்கவும், 24.02.2015 அன்று வாதியின் வீட்டில் வைத்து கடனாக ரொக்கம் <u>ரூ.8,00,000/-ம்</u> பெற்றுக் கொண்டதாகவும், மேற்படி தொகைக்கு மாதம் ஒன்றுக்கு நூற்றுக்கு 18 வட்டி சேர்த்து வட்டியும், அசலும் வாதி வேண்டும்போது வாதிக்கோ, வாதி உத்தரவு பெற்றவர்களுக்கோ ரொக்கம் செலுத்தி வைப்பதாக கூறி வாதிக்கு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்ததாகவும், மேற்படி பிராமிசரி நோட்டு கடன் மேற்படி பிராமிசரி நோட்டுக்கான அசல் மற்றும் வட்டி தொகைகளை செலுத்தும்படி வாதி பிரதிவாதியிடம் நேரிலும், ஆட்கள் மூலமும் துயர்ந்ததில் செலுத்தி விடுவதாகவே கூறி காலம் கடத்தி வந்ததாகவும், பின்னர் வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டு பொய்யான சங்கதிகளை கூறி பதிலறிவிப்பு அனுப்பியுள்ளதாகவும், பிரதிவாதி பிராமிசரி நோட்டின் பேரிலான கடன் தொகை மற்றும் வட்டி தொகைகளை செலுத்தி தீர்க்காமல் இருந்து வீண்காலம் கடத்தி வந்ததால் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

7. வாதி தனது வழக்கை நிரூபிக்க தன்னை வாசா1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, புரோநோட்டு வாசாஆ1, வாதி தரப்பு வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது வாசாஆ2, அஞ்சல் ஒப்புதல் அட்டை வாசாஆ3, பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு வாசாஆ4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. வாதி தரப்பில் வாசா1ன் சாட்சியம் மற்றும் வாசாஆ1 முதல் வாசாஆ4 வரையிலான சான்றாவணங்கள் மூலம் வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளதாக வாதிடப்பட்டது.

8. பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கு மறுதழித்து இந்நீதிமன்றத்தில் எடுத்துரைப்பதற்கு யாதொரு நடவடிக்கையும், எடுக்கவில்லை. மாறாக, எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டும், பிரதிவாதி தரப்பில் ஆஜரில்லாமலும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமலும், ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிக்கு தனது தரப்பை நிரூபிக்க போதிய வாய்ப்பளித்தும், வழக்கை மேல்நடத்த முன்வராமல் தோன்றாதரப்பினர்களாகியுள்ளார். எனவே, வாதி தரப்பு சாட்சியம் மற்றும் வாசாஆ1 முதல் வாசாஆ3 வரையிலான சான்றாவணங்களின் அடிப்படையில், வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளார் என்று தீர்மானித்து வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதி பிராது தொகை ரூ. 12,23,600/-ம், அசல் தொகை ரூ.8,00,000/-க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும் தீர்ப்புதேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம்வரை 6% பின்வட்டியும் இவ்வழக்கு செலவுத்தொகையுடன் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருககு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின் 2020ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் இன்று அவையறியப் பகரப்பட்டது.

ஒம். திருமதி. வி. திலகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.
தேனி இருப்பு பெரியகுளம்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வாசா1 - பி. செந்தில்குமார்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வாசாஆ1 | : | 24.02.2015 | புரோ நோட்டு அசல் |
| வாசாஆ2 | : | 12.12.2017 | வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது |
| வாசாஆ3 | : | ----- | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வாசாஆ3 | : | ----- | பதிலறிவிப்பு சார்பு செய்யப்பட்ட நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

ஒம். திருமதி. வி. திலகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.
தேனி இருப்பு பெரியகுளம்.

... உண்மை நகல் ...